[திரு. துரைமுருகன்] [*2020 செப்டம்பர் 15*

இப்போதுகூட ஒன்றும் கெட்டுப் போகவில்லை; நாளைக்கு நாங்கள் வரும்பொழுதாவது மாலை சூட்டினால், அது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் தொற்று இருந்த காரணத்தினால்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. வேறு ஒன்றும் கிடையாது. ஏனென்றால், அதில் அரசு கவனமாக இருந்து செயல்பட வேண்டியிருக்கின்ற காரணத்தினால்தான் அதைச் செய்ய முடியவில்லை.

திரு. துரைமுருகன்: பூவெல்லாம் போடலாம் அல்லவா? (குறுக்கீடு) கொரோனா என்பதால் மாலை போடவில்லை, பூ போடலாம் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொரோனா வைரஸ் எப்படி வருகிறது, எப்படிப் போகின்றது, எப்படி ஒட்டுகின்றது என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. வெளியில் சென்றால்தான் நமக்கே தெரிகிறது. அதனால்தான் எச்சரிக்கையோடு, இந்த அவை நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறதேயொழிய, அவருக்கு மாலை அணிவிப்பதிலே எந்தத் தவறும் இல்லை. நீங்கள் வேண்டுகோள் வைத்தால், நிச்சயமாக நாங்களும் அதற்குத் தயாராக இருக்கின்றோம். அதில் ஏதாவது பிரச்சினை ஏற்படக் கூடாது, தவறு ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் மாலை அணிவிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) மேகதாதுவில் அணை கட்டுவது தொடர்பாக முதலமைச்சர் தலைமையிலான குழு கர்நாடகத்திற்குச் சென்று கர்நாடக அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

2020 செப்டம்பர் 15]

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக ஒரு பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு காலையில் 'இந்து' பத்திரிகையைப் பார்த்தேன். அதில் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்கள். கர்நாடகத்தில் இருக்கின்ற நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள், 'மேகதாதுவில் அணை கட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழு சென்று, பிரதமரை சந்திக்கப் போகிறோம், வற்புறுத்தப் போகிறோம். தமிழ்நாடு அரசு case போட்டிருப்பது எங்களுக்குத் தெரியும். இருந்தாலும், அதையெல்லாம் தாண்டி நாங்கள் மேகதாதுவில் அணை கட்டுவதற்கு வேண்டிய பணத்தையெல்லாம் ஒதுக்கிவைத்திருக்கின்றோம். எனவே, நிச்சயம் நாங்கள் அதில் வெற்றி பெறுவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி அவர்கள் சென்று பார்க்கின்ற நிலையில், தமிழகம் எந்த நிலையை எடுக்கப் போகிறது? ஒன்று, தமிழ்நாட்டில் இருக்கின்ற, at least சட்டமன்றத்தில் இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்களையாவது கலந்து பேசி, அதில் முக்கிய தலைவர்களை அழைத்துக் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் ஒரு குழுவாகப் போய்ப் பார்க்கலாம். ஒரு காலத்திலே நானே கூட்டிக்கொண்டு சென்று பார்த்திருக்கிறேன். அதேபோன்று இல்லாவிட்டால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு, கர்நாடகத்திற்குச் சென்று வற்புறுத்தினால்தான் அந்த pressure நிற்கும். காரணம், இப்போது மத்தியிலும் பி.ஜே.பி. ஆட்சி. கர்நாடகத்திலும் பி.ஜே.பி. ஆட்சி. மனவாடு, மனவாடுக்கு சரியாகிவிடும். ஆகையினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, கர்நாடகம் எடுத்திருக்கின்ற நடவடிக்கை பற்றி சிந்தித்து,** என்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. நமக்கு வழங்க வேண்டிய நீர் முழுமையாக வழங்கப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த நீரைத் தடுக்கவோ, திருப்பி அனுப்பவோ கூடாது என்று உச்ச

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2020 செப்டம்பர் 15*

நீதிமன்றத்தில் தெளிவான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதுகுறித்து, மூன்று, நான்கு முறை மேலாண்மை ஆணையத்தில் அவர்கள் கொண்டு வந்தார்கள். நாம் கடுமையாக ஆட்சேபணை செய்த நிலையில், அது நீக்கப்பட்டுவிட்டது. ஆக, இதுகுறித்த வழக்கும் உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்றது. ஆகவே, அவர்கள் எந்தவகையிலும் மேகதாது அணை கட்டுவதற்கு, ஒருபோதும் தமிழ்நாடு அரசு அனுமதிக்காது என்பதைத் திட்டவட்டமாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கெனவே, நமது உரிமையை நிலைநாட்டுவதற்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பு முழுமையாக நம்மிடத்தில் இருக்கின்றது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் கேள்வி நேரத்தின்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்களின் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவான பதிலளித்தார்கள். அதாவது, பம்பப்படையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவது குறித்த கேள்விக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் துணைக் கேள்வி கேட்கும்போது, அந்தக் கட்டடம் இடிந்து விழுந்து மாணவர்கள் இறந்தால்** என்கின்ற அந்தக் கருத்தைச் சொன்னார்கள். எனவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோன்று, தற்போது நீராதார அமைப்பு குறித்து அவர் பேசும்போது ** என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 செப்டம்பர் 15] [திரு. டி. ஜெயக்குமார்]

வார்த்தையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் '8 மாதங்கள்' என்று சொன்னார்கள். இப்போது பாட்டுதான் ஞாபகம் வருகின்றது.

'உப்பு கடல்நீரும் சக்கரையாகலாம்,
முப்பது நாளிலும் நிலவை பார்க்கலாம்,
சுட்ட உடல்கூட எழுந்து நடக்கலாம்,

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது நடக்காது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தைகள் நீக்கப்படுகின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிளையாடல் படத்தில் ஒரு வசனம் வரும். 'குற்றம் கண்டுபிடித்தே பேர் வாங்கும் புலவர்கள் இருக்கிறார்கள்' என்று வரும். அதேமாதிரி expunction கேட்டே பெயர் வாங்குகிறவர் இவர். ஏதாவது சொன்னாலே 'expunge பண்ணுங்க' என்று சொல்கிறார். எல்லாம் பேசி, Question hour முடிந்து, நீண்ட heated discussion முடிந்து, இப்போது expunge கேட்கிறீர்கள், பரவாயில்லை.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி ஆகியோரும் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்களும் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்த